
அன்பளிப்பு

# வேதமுரசு



இதழ்—இரண்டு

அன்பளிப்பு: ரூபா 10/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸம்பவாமியுகேயுகே

# மனக்கண்

**வினைபடுபாலால் கொளல்**

"பிரமதேவன் ஒருநாள் தாழம்பூவை மறுத்தார்- பிறிதொருபோது பிரமதேவரைச் சரவணன் - தலையிற்குட்டி ஒறுத்தான்." பெருமைகளும், சிறுமைகளும் இவ்வாறே மாறிவரும்.

மாதம் தோறும், சமய இதழ் வெளிவருவதென்பது பெரிய முயற்சியாகும். இந்த வகையில்—"இந்துதர்மம்" இதழின் மலர்வு—பெருமைக்குரியது. "இந்துசாதனம்" புதிய பொலிவு பெற்றுப் பூத்துள்ளது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் தொட்டபணி, தொடர்வது கண்டு, மகிழும் பல்லாயிரம் இதயங்களில் நாமும் ஒருவராம்.

வேதமுரசு—முதல் இதழ்களின் அதிகமானவைகள், சென்ற இடங்களிலேயே, இலவசப் பிரதிகளாய் ஏற்ற முற்றன. ஆகையால், வேதமுரசு விட்டுத்தூறும் மழையானது. இலக்கை நோக்கிய குருவி தன் தலையில் பனம் பழம் சுமந்தது போல் நாம் செய்த வேள்வியில், வேதமுரசு இரண்டாம் இதழ், தாழம்பூவாக விழுந்தது.

எமது நிலம், ஆன்மீகத்தின், பண்பாட்டு விழுமியங்களின், தங்ககமாகும் என்பதைச் சொல்வதும், தாமான —சனாதனதர்ம— இதழை உருவாக்கிப் பார்க்கும், சோதனையைச் செய்வதுமே — வேதமுரசின் வேலையாகும். இதைச் சரியாகப் புரிந்து கொண்டு, எம்மை... கை தூக்கி விடும், மானுட நேயங்களுக்கு எங்கள் அன்பு வணக்கங்கள்.

மறம் மங்குவதாகுக.
அறம் ஓங்குவதாகுக.

—வேதமுரசு—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் அகவல்

ஔவையார் அருளியது

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்ப,
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குசபாசமும்
நெஞ்சக் குடிகொண்ட நீலமேனியும்
நான்கு கையும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழ்ஒளி மார்பும்
பொற்பற விளங்கும் பொருளே! கயிலை
அற்புதம் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுதென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளம் தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தால் கொடுவினை களைந்து
உவட்டா உபதேசம் புகத்தி என்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி,
கருவிகள் ஒடுக்கும் கருத்தினை அறிவித்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினை தன்னை அறுத்து இருள்கடிந்து
தலம் ஒருநான்கும் தந்தெனக் கருளி,
மலம் ஒருமூன்றின் மயக்கம் அறுத்து,
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டிலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்தி
குண்டலி யதனில் கூடிய அஜபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலதாரத்தின் மூண்டெழும் கனலை
காலால் எழுப்பும் கருத்து அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முகமாக எனக்கினி தருளி
புரியட்டகாயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரியப்படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழிகாட்டி
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சு அக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையை தந்தென்னையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே; □

**இதைப் பாடிப் பணிகிறவர்களுக்கு எல்லா நலன்களும் உண்டாகும்;**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களின் மனதில் நிறைந்த, மாண்புறு விநாயகர்

இந்துக்கள் தாம் தொடங்கும் செயல்கள் தடையின்றி நடைபெற கணபதியைக் கை தொழுவர்; கணபதியை முழு முதற் கடவுளாக வழிபடும் வழிபாட்டை - காணபதம் என்றும், இவ் வழிபாட்டை நிகழ்த்துவோரை காணபதர் எனவும் அழைப்பர்.

கணபதி உபநிடதம், ஹேரம்ப உபநிடதம், கணேச புராணம், ஸ்காந்தத்திலுள்ள கணேச மான்மியம், பிரமகைவர்த்த புராணத்திலுள்ள கணேச காண்டம், முத்கல புராணம், கணேசகீதை - கணேசதந்திரம், கணேச கல்வம், கணேசா சார சந்திரிகை, ஆகிய வடமொழி நூல்களிலும், தமிழில் திருவாவடுதுறை கச்சியப்ப முனிவர் அருளிய பார்க்க புராணத்திலும் (விநாயக புராணம்) விநாயகப் பெருமானின் புகழ் பேசப்படுகின்றது.

சக்தி ஐம்பத்தொரு வகையாக விளங்குவது போன்று, கணபதியும் ஐம்பத்தொரு வகைப்படுவர் என, நாகவபட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டர் - "சாரதா திலகம்" என்ற நூலின் உரையில் கூறுகிறார். சந்தான கணபதி, சுவர்ண கணபதி, நவநீத கணபதி, ஹரித்ராகணபதி, மகாகணபதி, உச்சிட்ட கணபதி என்ற அறுவரைப்பற்றிப் பல வெளியீடுகள் ஏலவே வந்துள்ளன.

கணபதி பிரமச்சாரியாக விளங்குகிறார் என்று பலர் குறிப்பிடினும், வல்லபகணபதியாக மடிமேல் சக்தியை வைத்துக்கொண்டு இருப்பதை நாம் காணுகின்றோம். இது தவிர ஐந்துதலையுடன் சிங்கத்தின் மேல் இருக்கும் ஹேரம்ப கணபதி, பாலகணபதி, ஊர்த்துவ கணபதி என்ற வகையான மூர்த்திகளும் உண்டு. சித்தி புத்தி ஆகிய தேவியருடன் விளங்கும் விநாயகருக்கு தென்னாட்டில் கோவில்கள் உள்ளன.

ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியான விநாயக சதுர்த்தியில், பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. திபேத், பர்மா, ஜாவா, இந்தோசீனா, ஜப்பான் ஆகிய இந்து பௌத்த மணம் வீசும் நாட்டிலும் விநாயகர் போற்றப்படுகின்றார்.

கணபதிவழிபாடுபற்றிய செய்திகள் சங்க இலக்கிய நூல்களில் குறைவு. வேதத்திலும் அரிது. கணபதி வழிபாட்டில் இப்போது பாவிக்கப்படும் மந்திரங்கள் பல அக்காலத்தில் பிரமண ஸ்பதி என்ற தெய்வத்திற்கென ஏற்பட்டதாகும். பௌதாயன தரும சூத்திரம், விநாயகரைப்பற்றி வருணிக்கின்றபோது விநாயகரை இடையூறுகளை உண்டாக்கும் பூதமாகவும், சாலகடங்கர், கூஷ்மாண்ட ராஜபுத்திரர், உஷ்மிதர், தேவயஜனர் என்ற நால்வர் சேர்ந்த ஒட்டு மொத்த வடிவம்தான் கணபதியென்றும், அவர் சாந்தியடையப் பூசை செய்ய வேண்டுமென்றும் கூறுகிறது.

இவ்விதம் விக்கினம் செய்வதாக இருந்தவரே காலப் போக்கில் விக்கினத்தைப் போக்கும் தெய்வமானார். வியாசர் பாரதத்தைச் சொன்னபோதும் சிவன் தம் தந்திர நூல்களைச் சொன்னபோதும், அவற்றை ஏட்டில் எழுதுபவராக இருந்தார் என்று கதைப்பற்றுள்ள அறிஞர் கூறுகின்றனர்.

கணபதியின் சிற்பம் அதிகமாக இரண்டாம் நூற்றாண்டில் காணப்படுகின்றது. நாலாம் நூற்றாண்டில் முழு உருவமும், உறுப்புகளும் காணப்படுகின்றன. ஐந்துதலையுள்ளவராகப் பிள்ளையார் மாறியது மட்டுமன்றி, கணேசானி என்ற பெண் உருவத்தோடும், சில சமயம் பைரவ அம்சத்தோடும், பெருச்சாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்லாமலும், மயில் – குவளை, ஆமை முதலிய வாகனங்களோடும், பிள்ளையார் உடையர்.

தேபாளத்தில் சூரியனது அம்சமாயும், சீனத்திலும் – யப்பானிலும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்ட உறவின் சின்னமாயும் – காங்கி டென் என்ற இரட்டைத் தெய்வமாயும் சொல்படுகின்றார். பிள்ளையாருக்கு யானை முகம் மட்டுமல்ல — திருச்செங்காட்டங்குடியில் நரமுக விநாயகராய் அவர் விளங்குவது சிறப்ப அருமைகளில் ஒன்றாக உள்ளது. □

**கணேச பஞ்சரத்தினம்** — ஸ்ரீ சங்கர பகவத் பாதரவர்கள்



முதா கராத்த மோதகம் ஸதா விமுக்தி சாதகம்
கலாதராவதம் சகம் விலாசி லோகரக்ஷகம்।
அநாயகைக நாயகம் விநாசிதேப தைத்யகம்
நதாசுபாசு நாசகம் நமாமிதம் விநாயகம்.॥
நதேதராதி பீகரம் நவோதி தார்க்கபாஸ்வரம்
நமத்சுராரி நிர்ஜரம் நதாதிகா பதுத்தரம்।
சுரேஸ்வரம் நிதீஸ்வரம் கஜேஸ்வரம் கணேஸ்வரம்
மஹேஸ்வரம் தம் ஆஸ்ரயே பராத்பரம் நிரந்தரம்.॥
ஸமஸ்த லோக சங்கரம் நிரஸ்த தைத்ய குஞ்சரம்
தரேதரோதரம் வரம் வரேப வக்த்ரம் அக்ஷரம்।
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்
மநஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம்.॥
அகிஞ்சனார்த்தி மார்ஜநம் சிரந்தனோக்தி பாஜநம்
புராரி பூர்வ நந்தநம் சுராரி கர்வ சர்வணம்।
ப்ரபஞ்சநாச பீஷணம் தநஞ்ஜயாதி பூஷணம்
கபோலதாந வாரணம் பஜேபுராண வாரணம்.॥
நிதாந்த காந்த தந்த காந்திம் அந்த காந்த காத்மஜம்
அசிந்த்ய ரூபம் அந்த ஹீநம் அந்தராயக் ருந்தநம்।
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகிநாம்
தம் ஏக தந்தம் அத்புதம் விசிந்தயாமி ஸந்ததம்.॥
மஹாகணேஸ பஞ்சரத்னம் ஆதரேண யோஸ்ந்வஹம்
ப்ரஜஸ்பதி ப்ரபாதகே ஹ்ருதிஸ்மரன் கணேஸ்வரம்।
அரோகதாம் அதோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயுர் அஷ்டபூதிம் அப்யுபைதீ சோஸ் சிராத்.॥

வேதபுரசு ○ இதழ் இரண்டு ○



# பசிக்குத்-தாய்.
# ரிஷிக்குக்-காயத்திரி.

முத்தோடு பவளம், தங்கம் முரண்படு கருமை வெண்மை
இத்தனை நிறங்கள் கொஞ்சும் எழில் முகம் ஐந்து கொண்ட
உத்தமி ஒவ்வொன்றிற்கும் விழிகள் மூன்றுடைய அன்னை
தத்துவ எழுத்து ரூபம் தாங்கிய எங்கள் தேவீ
இரண்டு தாமரைகள், சங்கு ஏவு சக்கரம், கபாலம்]
மிரண்டவர்க்கு அபயம், தாழில் விழுந்திடில் வரம்; இன்னும்
அங்குசம், கயிறு, சாட்டை ஆகிய பத்தும் கொண்டே
திங்களின் கலைகொள் தேவி காயத்திரி போற்றி போற்றி

மனித உடலியல் வாழ்வானது, தூய்மையானதாக, மனமானது உயர்நிலையை அடைந்திடுவதற்காக, அரியபிறவியான மனிதப்பிறவியை எடுத்த நாம்—எமது கடமையைச் செய்தாக வேண்டும்: இந்தக் கொள்கையின் அடித்தளத்தில் நாம் இருப்போம்.

இவ்வுடல் கிடைத்தது, கடமையைச் செய்வதற்கே: சூரியன் எப்படி உலகிற்குப் பொதுவானவரோ! அவ்வாறே மனிதர் யாவருக்கும் காயத்திரி மந்திரம் உரியது:

அளவிடமுடியாத பெருமையுடைய ஒளிப்பிழம்பைச் சிவனாக விஸ்ணுவாக, சூரியனாக, அன்றியாதாயினும் ஒரு தெய்வமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஒலியாக வழிபட முடியும். எனவே அவரவர் சக்திக்கு ஏற்றவாறு அனைத்தும் ஒன்றேயாம் என்று உறுதிகொள்வோம்.

"யதேமாம் வாசம் கல்யாணீம் ஆவதாஸி ஜனேப்ய" என்னும் வாசகத்தின் ஊடாக, எல்லோருக்கும் வேதவாசகங்கள் பொதுவானவை தான் என்கிறது வேதம்.

வேதக்கடலை ஞானிகள் கடைந்திட்ட வேளையில், அறிவின் வடிவே அமுதமாகக் கிடைத்தது. அது ஆண் அல்ல, பெண் அல்ல அலி அல்ல, நாம ரூபம் இல்லாது உலகை உய்விக்கும் சக்தியாக அம்மை, அப்பன், ருருவாக வந்தது. முற்றத்துறந்த ஞானிகளுக்கு மட்டுமல்லாமல்; வாழ்வியலில் தோய்ந்தவர்களுக்கும் வாய்த்த சாவாமருந்துதான்; காயத்திரி என்ற பேரொளியாகும்.

"ஓம் பூர்ணமத பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே!
பூர்ணம் பூர்ணமாதாய பூர்ணமேவா சிஷ்யதே!!"

என்னும் மந்திரத்தின் மூலம், நாம்பெறும் செய்தி எதுவெனில் "இறைவன் எல்லா இயற்கைச் சக்திகளிலும் நிறைந்தும், உறைந்தும் முழுமையாக இருக்கின்றான். ஒவ்வொரு இயற்கையிலும் இறைசக்தி முழுமை பெற்றிருக்கிறது" என்பதுதான்.

சகல வேதங்களுக்கும் தாய்போன்ற (காயத்ரீம் சந்தஸாம் மாதா) ஸ்ரீ காயத்ரியைக் காலை உச்சிப்பகற் பொழுது. மாலை ஆகிய வேளைகளிலும், சிறப்பாக உச்சிப்பகற்பொழுதிலும் உச்சரிப்பதே பொருத்தமாகும்.

வேதசப்தங்களில் காயத்ரியாக இருக்கிறேன் என்று கீதையிலே கண்ணபிரான் அருளினார்.

ஏழைகளுக்கு உணவூட்டுதல், தாகம்தீர்த்தல் இவைகளைவிட உயர்ந்த தானம் இல்லை. துவாதசிக்கு நிகரான திதி இல்லை, காயத்ரிக்கு நேரான மந்திரமில்லை, தாய்க்கு மேலான தெய்வமில்லை. என்பது ஆன்றோர் வாக்கு.

*நான்னோத கஸமம் தானம்ந திதிர்த்வாதசீ ஸமா!*
*ந காயத்ரியா: பபரே மந்த்ர: ந மாதுர்ணதைவதம் பரம்!!*

என்ற வாக்கியம், மேற்காட்டிய கருத்தைத்தான்; சொல்கிறது.

அன்போடு ஜபம் செய்தவனை விடாது பாதுகாப்பது எதுவோ அதுவே காயத்ரி. இதை இன்னார்தான் ஜபிக்கலாம் இன்னார் ஜபிக்கக் கூடாது என்பதில்லை. யாருக்கு இத்தத்துவம் (உடல் நிலையற்றது. எல்லாம் சக்திமயம்) விளங்குகிறதோ அவர்கள் காயத்ரியை உபாசிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழுக்குள் இயல் இசை நாடகம் என்னும் பிரிவுகளை அடக்கி இவையாவற்றுக்கும் குறியீடான பிரணவத்தை ஓங்காரம் என்ற எழுத்தால் (ஓ) சுட்டிக்காட்டிய தமிழர்கள், காயத்ரி என்னும் பேரொளியை அனுபவித்திருந்த முன்னோடிகள் என்பதில் ஐயமிருக்க முடியாது. ஓங்காரத்தின் உட்பொருள் முழுவதையும் 'ஓ' என்ற ஒரு எழுத்தில் உருவில் காட்டிய பெருமையும் தமிழர்களுக்கே உரியது என்பதை உலகு ஏற்றுள்ளது.

உடல் வாழ்வை ஒழுங்குபட நடத்துவது பூலோகவாழ்வு உள்ளத்தை மேலான எண்ணங்களால் வழிநடத்துவது பிதுர்லோக வாழ்வு — எண்ணம் முழுவதையும் இறைவனில் செலுத்தும் வாழ்வு சுவர்க்கவாழ்வு — இவைகளை பூடகமாகச் சொல்வதே (பூர் – புவ, ஸுவ பூ - உடல், புவ - பிராணன் – சிவ, ஆத்மா) காயத்ரீயின் பிரதான விஷயம் எனப்படுகிறது.

தியான சுலோகமாகவும், பிரார்த்தனைக்கு கருவூலமாகவும் அமைந்துள்ள காயத்ரியானது தேவிகாயத்ரி, ருத்ரகாயத்ரி, விஸ்ணு காயத்ரி, சுப்ரமண்யகாயத்ரி, துர்க்காகாயத்ரி எனப்பலபாகுபாட்டில் அமைந்துள்ளது. ஆனால் எல்லாவற்றுக்கும் பொதுவாயும் நடுநாயகமாகவும் விளங்குவது பிரம்மகாயத்ரீ எனப்படும் சூரிய காயத்ரியேயாகும். (பரமஹம்சகாயத்ரி என்று துறவிகளுக்குரிய காயத்ரியும் உண்டு)

"ஓம்பூர் புவஸுவக தத்ஸவிதுர் வரேண்யம்!
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்"

இதுவே வேதகாலம் முதல் இன்றுவரை வாழையடி வாழையாக வழக்கிலிருக்கும் புனித மந்திரம்.

இது காலையில் உச்சரிக்கும்போது ஜபமாலைக் கை அழகினள் நாவில், 'ரிக் - கைச் சுமந்த பிரம்மதேவதைச் சுடராகவும்,

உச்சிப் பகல் பொழுதில் பொங்கிடும் யசுர்வேதமாகக் கையில் சூலம் தரித்த உருத்திர தேவதையான மங்கள சாவித்திரி உருவமாகவும்,

மாலையில் சாமவேத உச்சரிப்பைக் கொண்ட கருடவாகனத்து விஸ்ணு தேவதையாகவும், விளங்கிவருவதை ஞானிகள் உணருவர். அவ்விதம் கண்டுணர்ந்த மெய்ஞானிகள் தந்த காயத்ரிகளை அடுத்த இதழில் படிப்போம். □ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட் கதை

"யார் என்னை எப்படி
வழிபடுகிறார்களோ,
அப்படியே அவர்களுக்கு
நான் அருள்புரிகிறேன்.
பார்த்தா! மக்கள்
எல்லா வகைகளிலும்
எனது வழியையே
பின்பற்றுகின்றார்கள்"
— கீதை 4 — 11

# புதுமையான சாயக்காரன்



பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

ஓர் ஊரிலே ஒரு சாயக்காரன் இருந்தான். அவனிடம் ஒரு பாத்திரம் நிறைய வர்ணக் கலவை இருந்தது. மக்கள் தங்களுடைய துணிகளுக்குச் சாயம் பூசுவதற்காக அவனிடம் போவது வழக்கம்.

சாயக்காரன் துணிகளுக்குச் சாயமேற்றும் போது மற்றவர்களுக்குத் தெரியாத புதுமையான ஒரு முறையைக் கையாண்டு வந்தான். "உன் துணிக்கு எந்த நிறத்தில் சாயம் தோய்க்க வேண்டும்?" என்று அவன் வாடிக்கைக்காரரைக் கேட்பான். "சிவப்பு நிறம்" என்று வாடிக்கைக்காரர் சொன்னால், உடனே சாயக்காரன் வர்ணக் கலவை உள்ள பாத்திரத்தில் அந்தத் துணியைத் தோய்த்து எடுப்பான்; பிறகு, "இதோ, எடுத்துக்கொள்; உன் துணிக்குச் சிவப்புச் சாயம் போட்டாயிற்று" என்று சொல்லிச் சிவப்பு நிறம் போடப்பட்ட துணியை வாடிக்கைக்காரனிடம் கொடுப்பான்.

மற்றொருவன் தன் துணிக்கு மஞ்சள் சாயம் வேண்டும் என்று கேட்பான். சாயக்காரன் அவனுடைய துணியையும் அதே பாத்திரத்தில் தோய்த்து எடுப்பான். துணியை வெளியில் எடுக்கும் போது மஞ்சள் நிறமாக மாறியிருக்கும்! "இதோ, உன் துணிக்கு மஞ்சள் நிறம் போட்டாயிற்று, எடுத்துக்கொள்" என்று சொல்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே நீலம், ஊதா, கறுப்பு, பச்சை ஆரஞ்சு என்று இருக்கப்பட்ட அத்தனை நிறங்களில், எந்த நிறம் வேண்டுமானாலும் அவன் வர்ணக் கலவை உள்ள அதே பாத்திரத்திலேயே துணியைத் தோய்ப்பான் துணியை வெளியில் எடுக்கும்போது தேவையான நிறம் வந்துவிட்டிருக்கும்.

இந்தப் புதுமையை வாடிக்கைக் காரர்களில் ஒருவன் கவனித்தான், அவன் சாயக்காரனிடம், "ஐயா, என் துணிக்கு எந்த நிறத்தைக் கேட்பதென்றே எனக்குத் தெரியவில்லை. தங்களுடைய பாத்திரத்தில் எந்த நிறத்தை வைத்திருக்கிறீர்களோ, அந்த நிறத்திலேயே என் துணிக்கும் சாயம் ஏற்றிக் கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டான்.

பக்தனுடைய விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற விதத்தில் பகவான் உருவம் உள்ளவராகவோ, அருவம் உள்ளவராகவோ தோன்றுகிறார். அப்படித் தோன்றும் அவருடைய தெய்வீக வடிவம் ஒவ்வொருவரின் உள்ளத்தின் பரிபக்குவத்திற்கும், காலம், இடம், சூழ்நிலைகளுக்கும் பொருத்தமான வகையில் உண்மையானதாகவே அமைகிறது. அவரிடம் எல்லாவிதமான நிலைகளுமே இருந்து கொண்டிருக்கின்றன. அவருடைய தெய்வீக இயல்புகளும் ஆழ்ந்த நிலைகளும் உண்மையில் எப்படிப்பட்டவை என்பதை யாரால் புரிந்து கொள்ள முடியும்? இறைவனாகிய சாயக்காரன் மட்டுமே, தான் எந்த நிறச் சாயத்தில் தோய்ந்திருக்கிறான் என்பதை அறிவான். அவனால் எந்த வடிவத்திலும் தோன்ற முடியும் உருவம் ஒன்றுமே இல்லாமலும் கூடப் பிரகாசிக்க முடியும். □ □

---

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும்
இன்னாச் சொல் நோற்பாரின் பின்"

"இன்றைக்கு நான் விரதம்" என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறார்கள் எத்தனை பேர்? ஆனால் யாரும் ஒன்று சொல்லிவிட்டால் அதைப் பொறுக்கும் மனப் பக்குவம் இல்லாது சண்டைக்குப் போய் விடுவார்கள்.

அடுத்தவர் (பிறர்) உம் மீது சொல்லுகின்ற கடுஞ் சொல்லை, ஆகாதனவற்றை பொறுத்துக்கொள்ளுங்கள். அது அவரவர் அறியாமை என உணருங்கள்; அதைப் பொறுப்பதே விரதத்திலும் மேலான தவம்;

— திருவள்ளுவர் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதங்கள் —ஈச உபநிடதம்

— பிரம்மஸ்ரீ சி, வெங்கடேச சர்மா —

குர்வந்நேவேஹ கர்மாணி
ஜிஜீவிஷேத் ஸதம் ஸமா : !
ஏவம் த்வயி நான்யதே
தோஸ்தி ந கர்ம லிப்யதே
நரே !

கருத்து – இவ்வுலகில் நூறு ஆண்டுகள் வாழ விரும்பின் கர்மத்தைச் செய்து கொண்டு வாழ வேண்டும். ( ஆனால் ) கர்மப் பற்று உன்னைத் தொடராத வழியில் அதைச் செய். இதை விட வேறுவழி உனக்கு இல்லை.

விளக்கம் - இம் மந்திரத்தில் ஆத்மனைத் தெரியாதவன், தெரிந்து கொள்ளத் தகுதியற்றவன் என்ன செய்ய வேண்டுமென்று கூறப்படுகிறது. முதலாவது மந்திரத்தில் ஞான நிஷ்டை எனும் நிவிர்த்தி மார்க்கம் கூறப்பட்டு இதில் நிஷ்காம்ய கர்ம நிஷ்டை எனும் பிரவிர்த்தி மார்க்கம் கூறப்படுகிறது. பகவத் கீதை 3-ஆம் அத்தியாயத்தில் 3-ஆம் சுலோகத்தில் " இவ்வுலகத்தில் இரண்டு வித நிஷ்டை முன்னர் என்னாற் கூறப்பட்டது: ஸாங்க்யர்களின் ஞானயோகத்தால் எய்துவது; யோகிகளின கர்ம யோகத்தால் எய்துவது எனக் குறிப்பிடப்படுவது இங்கு அவதானிக்கத் தகும்.

ஞான வழி நிற்கத் தகுதியற்றவன் சாஸ்திரப்படி அக்நிஹோத்ரம் முதலிய வைதிக கிரியைகளை நித்திய நைமித்திய கர்மாக்களைச் செய்து கொண்டு நூறு ஆண்டுகள் வரை வாழலாம். அவற்றில் ஊக்கமுடன் ஈடுபட்டுச் செவ்வனே செய்து வருமிடத்து, அவற்றின் பலனில் இச்சை வைக்காதவனாக ( நிஷ்காமியனாக ) இருக்க வேண்டும்; ஞானசித்தி அடைவதற்கு முன் எவரும் கருமத்தை முற்றாகத் துறக்க வியலாது. பயனில் விருப்பற்றுச் செய்யும் செயல் சித்த சுத்திக்கு இட்டுச் செல்லும்; ஈற்றில் ஞானத்தை அடைவிக்கும். அதாவது கர்ம யோகம் ஞானயோகத்திற்கு வழியாகிறது: " காய் காய்த்தவுடன் பூ உதிர்ந்து போவது போல் ஞானசித்தி ஏற்பட்டதும் கருமம் நழுவிப் போகும்" ராமகிருஷ்ண பரமஹம்சர்.

ஞானி அறிவு மார்க்கத்தினாலும், பக்தன் அன்பினாலும் பெறும் முடிபை ( பிறப்பிறப்பற்ற நிலை மோக்ஷம் ) கருமயோகி (நல்லவை, இய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லை இரண்டையும் சமமாகப் பார்ப்பவன்: "ஸமத்வம் யோக உச்யதே") பற்றற்ற கருமஞ் செய்வதனால் அடைகிறான்.

பற்றற்றுக் கருமஞ் செய் என்று சொல்வது எளிது; செய்கையில் இது எவ்வாறு சாத்தியம்? சுயநலம் கருதாது செய்கிற செயல் ஒவ்வொன்றும் நம்மைப் பிணித்துக் கொண்டிருக்கும் விருப்பத்தகாத விலங்குகளில் ஒவ்வொன்றை அகற்றும்; இத்தகைய செயல் படிப்படியாக வளர்ந்து சமுதாய, உலக நன்மையைக் கருதிச் செயல்படும் வளர்ச்சியை அடையும் போது செயற்படுபவனுடைய நல்லெண்ணம் ஒன்று திரண்டு அவனை பரிசுத்தனாக்கிவிடும். இது வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கூடிய உண்மை.

வேதகால ரிஷிகள் உலக வாழ்க்கையை நன்றாகக் கவனித்துச் செய்த தரும உபதேசம், இவ் உபநிஷதப் பொருளை வலியுறுத்துவதாக அமைவது ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் உபதேசம்.

"கர்மணைவ ஹி
ஸம்ஸித்திம்
ஆஸ்த்திதா ஜநகாதய:
"லோக ஸங்க்ர ஹம்
ஏவாபி
ஸம் பச்யங் கர்த்து
மர்ஹஸி"

கருத்து:- உலக வாழ்க்கை நலத்தைக் கருதியும் நீ தொழில் புரிதல் தகும். ஜனகன் முதலியோர் கருமஞ் செய்தே சித்தி பெற்றார்கள். □□

ஸ்ரீ கீதை 3-20

---

வெட்டெனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது — நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங் — கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பல சொல்லி யிடித்துண்கை — சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும். — ஔவையார் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேரடியிற் கனிந்த பழங்கள்

## கடையிற் சுவாமிகளின் அருள்மிகு வரலாறு

ம. சிவயோகசுந்தரம்
சிறப்புக் கட்டுரை

இலங்கையின் குரு பரம்பரைக்கு முதல்வராகத் திகழ்பவர் கடையிற்சுவாமிகள் இவர் இன்றைக்கு மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகமானவர். மகான்கள் தமது வாழ்க்கையின் தொடர்புகளைப் பிறருக்குச் சொல்வது வழக்கமில்லை அவர்களைப் பொறுத்தமட்டில் அப்பாகம் மறந்துபட்ட ஒன்றாகும்.

ஆதிக் கடை நாதன் என ஆரா அன்புடனும், கடையிற் குருநாதன் என்றும் கடையான் என்றும் ஆயிரக்கணக்கான மக்கள் அல்லும் பகலும் சொல்லிப் பரவும் கடையிற் சுவாமிகளின் தரிசனத்தால், திருநோக்கால் பரிசத்தால், ஏச்சினால், பேச்சினால், உபதேசத்தால், தீட்சையால் நற்கதி அடைந்தவர் தொகை சொல்லிலடங்காது. சுவாமிகள் நடந்து சென்ற



இடத்துத் தெருப்புழுதியை வாரித்தமது உடம்பில் பூசிக் கொண்டவரும் அவர் சுருட்டுப் பற்றும்போது துப்பும் எச்சில் தம்மேற் படுமாறு நின்று பயனடைந்தவரும் பலராவர்.

கடையிற் சுவாமிகளின் புகைப்படம் எவராலும் எடுக்கப்படவில்லை; இப்போது பலரிடம் இருக்கும் படங்கள் ஓவியக்கலைஞரான ஒரு பக்தரால் வரையப்பட்டதாகும். கடையிற் சுவாமிகளைக் கண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அவரின் தெய்வீகத் தன்மையை அருமையாகக் கூறியுள்ளார்கள். பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் பொறித்த அழகுத்திருமேனி: ஆறரை அடிக்கு மேற்பட்ட அழகுத்திருமேனி. அசையும் திருக்கரங்கள், அழகொழுகும் கண்கள், நீண்ட கூரிய மூக்கு அழகிய கன்னங்கள், சடையும் பரட்டையுமான தலை. தோளிற் கருநிறச் சால்வை. கக்கத்தில் நரைத்த குடை அரையிலே உயர்த்திக் கட்டிய வேட்டி, மெதுவான நடை, மழலை மொழி, கண்டாரை வசீகரிக்கும் திருக்கோலம். சுருட்டுப் புகைத்தாலும் மணமில்லாத திருவாய். அவர்மீது பதிகம் பாடிய பக்தர் ஒருவர் அவரது திருக்கோலத்தையும் உடையையும் "பெரிய கடை நாதன் பித்தன் திருக்கோலம் கரிய வர்ணச் சீலை கரித் தோலென சால்வை" என வர்ணித்துள்ளார்.

கடையிற் சுவாமிகள் தென்னிந்தியாவிலுள்ள பெங்களூரில் ஒரு நீதவானாக இருந்தார்கள் ஒரு கொலைவழக்கில் குற்றவாளிக்குத் தூக்குத்தண்டனை விதிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. யூரிமார்கள் ஏகமனதாகக் குற்றவாளியைக் கொலைகாரன் எனத் தீர்ப்புக கூறினர். நீதவானின் உள்ளம் கொலைகாரனைக் குற்றவாளியாக ஏற்றுக் கொள்ளவில்லை: மனச்சாட்சி நீதவானின் மனத்தை உறுத்தியது: நீதவானுக்கு மனத்துணர்வு தோன்றியது. இவனார்? நானார்? இவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்க நானார்? என்று விசாரணை எழுந்து விட்டது: இதன் விளைவு நீதவான் உத்தியோகத்திற்கு முழுக்குப் போட்டு நானார் என்னுள்ளம் ஆர்? நாங்கள் ஆர்? என்ற வினாக்களுக்கு விடை காண குருவருளை நாடி குருவருள் பெற்று முத்தியானந்தர் என்ற திட்ச நாமத்துடன் சிவன் முக்தராய் காட்சி கொடுத்தார்

ஈழநாட்டவரான வைரமுத்துச் செட்டியார் தமிழ் நாட்டிலே தல யாத்திரை செய்த போது தற்செயலாக முக்தியானந்தரை தரிசிக்க நேர்ந்தது. சுவாமிகளின் திருவருள் விலாசத்தால் ஈர்க்கப்பட்டார். தாம் சுவாமிகளுக்கு ஆட்படல் வேண்டுமென்ற உள்ளக்கிடைக் கையோடு சுவாமிகளை அணுகினார். அவரைக்கண்ட மாத்திரத்தே சுவாமிகள் "நீ இங்கு வரவேண்டாம் நான் அங்கு வருகிறேன்" என்று அருள் புரிந்தார், செட்டியார் பெருந்தயக்கத்துடன் சுவாமிகள்பால் உள்ளத்தைப் பறிகொடுத்து வெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுடலாய் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

கடையிற் சுவாமிகள் சகல சம்பிரதாயங்களுக்கும் சங்கற்ப விகற்பங்களுக்கும் அப்பாற்பட்டவர்: அனுசர்ணையிலுள்ள விதி விலக்குகளுக்கெல்லாம் அவர் தாமே விதிவிலக்காகத் திகழ்ந்துள்ளார். மது மாமிசம் போன்றவற்றையும் விலக்காது ஏற்றுக்கொள்வார்கள். இது அனாசாரமென்று சுவாமிகளை எட்டநின்று இகழ்ந்தாரும் உளர். சுவாமிகள் மது மாமிசம் உட்கொண்டமையும ஏனையோர் மது மாமிசம் உட்கொள்ளுதலும் பேரளவில் ஒன்று, தன்மையளவில் வெவ்வேறு. பற்றற்ற நிலையில் வாழ்ந்த சுவாமிகளுக்கு மரக்கறியும் ஒன்று. மாமிசமும் ஒன்றே, கள்ளுங் கழுநீரும் ஒன்றே.

சுவாமிகள் அன்பர்கள் இல்லங்களில் அமுது செய்வது வழக்கம். அவர் செல்லும் இடம் அடியார்களும் பிறருமாகப் பலர் அவரைத் தொடர்ந்து செல்வார்கள். விருந்து அளிப்போர் அவர் மனங்கோணாது வேண்டியபடியெல்லாம் ஆக்கிப்படைத்து அவர்களை மகிழ்விப்பார்கள். உணவுப் பிரியர்கள் சிலர் இதனை சாதகமாகக் கொண்டு சிலநாட்களாகச் சுவாமிகளைப் பின்தொடர்ந்து சென்றார்கள். ஒருநாள் சுவாமிகள் உணவு வேளைக்கு ஒரு வீட்டை நோக்கிச் செல்கையில் உணவுப்பிரியர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். வழியிலே மெழுகு உருக்கிக்கொண்டிருந்த ஒருவனிடம் சுவாமிகள் திடீரென கையை நீட்டினார், அவன் தடுமாற்றம் அடைந்து உருக்கிக் கொண்டிருக்கும் மெழுகில் ஒரு அகப்பை அவர் கையில் ஊற்றிவிட்டான் பின்தொடர்ந்தவர்கள் மெல்ல மெல்ல பின் வாங்கினார்கள். சுவாமிகள் திரும்பி நின்று எல்லோரும் காண அதைக் குடித்துவிட்டு "வாருங்களேன் வாங்கிக் குடியுங்களேன்" எனச்சப்தமிட்டார். பின்வாங்கியவர்கள் திரும்பியும் பார்க்காமல் ஓடிவிட்டார்கள். □ (வளரும்)



காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்நெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உலகில் எழுந்த நூல்களின் — தொன்மையான ரிக்வேதத்தில், சூரியவழிபாடு குறிக்கப்பட்டுள்ளது. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், சூரியவழிபாடு இந்தியாவில் இருந்தது. தமிழ் மொழியில் தொல்காப்பியத்தில் கொடிநிலை, என்ற பதத்திற்கு கீழ்திசைக் கண்ணே நிலைபெற்றுத்தோன்றும் வெஞ்சுடர் மண்டலம் என்ற பதவுரை குறித்தாளப்பட்டுள்ளது. உச்சிக்கிழான் கோட்டம் என்பது சூரியனின்கோயிலென்று சிலப்பதிகாரத்தில் பேசப்பட்டுள்ளது.*

# சோழர் நடத்திய இந்திர விழாவும், தைத் திருநாளும்.

ஆடியில் உழவு தொட்டு, புரட்டாசியில் விதை போட்டு கார்த்திகையில் களை பிடுங்கி மார்கழியில் முற்றும் நெற்பயிர் கண்டு உழவன் மனம் மகிழும்.

முத்துச்சம்பா அரிசியுடன், கரும்பின் சாறுவிட்டு பாசிப் பயற்றைக் கலந்து, வீட்டு முற்றத்தில் —பெரியவர்கள் பொங்கும் பொங்கலைக் கண்டு சிறுசுகள் கூடிக் குலவிக் குதூகலிப்பர்.

மஞ்சளுடன் இஞ்சியும்' வெற்றிலையும் பாக்கும், கதலிப் பழமும் — விருந்தினரைக் கலகலப்பாக்கும், கூடவே; பூசினிக்காயின் கறியும் மணக்கும்.

மார்கழித் திங்கள் கடைசி நாளை — (தைப்பொங்கலுக்கு முதல்நாள்) போகிப் பண்டிகை நாள் என்றும், இந்திர விழா நாளென்றும், கொண்டாடுவர் அன்றைய நாளில் இந்திரனுக்குப் பொங்கல் நடைபெறும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தென்திசை மருங்கினோர், செழும்பதி தன்னுள் இந்திர விழவு கொண்டெடுக்கு நாளிது வெனக் கடுவிசை அவுணர் கனங் கொண்டீண்டிக் கொடு வரியூக்கத்துக் கோநகர்." என்ற பாடலில் வரும் கோநக ரின் மதிப்புடை நாயகன் இந்தி ரனாகும்.

இந்திரனின் மறுபெயர் போகி. தீபகச்சாந்தி, இந் திர கோடனை, ஆயிரம் கண் ணோன் விழா - என்றெல்லாம் இந்திரவிழா பாராட்டப்படும். கொடித்தேரட் செம்பியன் என்ற மன்னன் இவ்விழாவை நாட்டின் தலைமை விழாவாக நடத்தினான். முடிவடைந்த மழைக்கு நன்றிகூறி - வற்றாத மழைவேண்டிச் செய்யப்படும் இவ்விழாபற்றி - வால்மீகியும். காளிதாசரும் பாடியுள்ளனர். "மார்கழித் திங்கள், மதி நிறைந்த நன்னாளில் நீராடப் போதுவீர்" எனவும்.

"தையொடு திங்களுப், தரை பிறக்கி தண் மண்டலமிட்டு ஐயநுண் மணற்கொண்டு தெரு வணிந்து அழகினுக் கலங்க ரித்தனள்" என்ற பாசுரவரிகள் தையின் சிறப்பைக் காட்டும். பசிநீங்கி மக்கள் வாழ உணவு வேண்டும். உண்டி கொடுத் தோர் உயிர் கொடுத்தோர் ஆவர் தைநாளில் அக்கினிக் கும் (அடுப்பு) இந்திரனுக்கும் (வீட்டுத் தெய்வம்) தீபத்திற் கும் — பிள்ளையாருக்கும் — சூரியனுக்கும் பொங்கலிட்டு பூசை செய்து வழிபடுவது வழமையான மரபாகும்.

சூரிய ஒளியின்றேல் தாவ ரமில்லை, உயிரினத்தின் வளர்ச்சியில்லை, மழையில்லை ஆதலால் சூரியன் மனிதகுலத் திற்கு இன்றியமையாதவரா னார். ஐரோப்பா-தென்அமெ ரிக்கா - சீனா முதலிய நாடுகளி லும் சூரிய வழிபாடு உண்டு. எகிப்தியர்கள் சூரியனை வணங்கியுள்ளனர். கிரீஸ் மெச் சிக்கோ முதலிய நாடுகளிலும் சூரிய வழிபாடுள்ளது. சூரிய குலத்தவர்கள் என்று இந்திய ஜப்பானிய, மன்னர்கள் தம் மைச் சொல்லி அழைத்திட்ட வரலாறுகள் உள்ளன. இந்தி ரனும், சூரியனும், கண்ணனும், வருணனும் தெய்வமாயினும் பொங்கல் நாளில், மிக்க விசேடமாகச் சூரியனே! நாயக னாகப் போற்றப்படுகின்றார்.

சூரியனைப்பற்றிய மந்தி ரங்கள் வேதத்தில் உள்ளது. மூவகை அக்கினியில் சூரியனும் ஒருவர் என்பது ருக்வேதம். சவிதா, பகன், பூஜா, விஷ்ணு கேசி, வைசு வானரன், விருஷா கபி, ஆகிய பெயர்கள் மந்தி ரத்தில் சூரியனுக்குள. உதயத் தில் உஷையும், நன்பகலில் சூர்யாவும், மாலையில் விருஷா பியாயும், சூரியனின் மனைவி யராகும் — என்கிறது வேதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனைத் தெய்வமெனப் போற்றும் மதத்தைச் சௌரம் என்று அழைப்பர். ஆதிசங்கரர் சௌரத்தை ஏற்றுக் கொண்டார்.

சூரியன்தேர் - ஒற்றைச் சக்கரம், பன்னிரண்டு ஆரக்கால் வேதத்தின் ஏழுசப்தங்களும் ஏழு குதிரைகள். இருள் மயமான அண்டத்தைப் பிரமதேவர் பிளந்தபோது - ஓம் என்ற ஒலி உண்டானது. அவ்வொலியிலிருந்து சூரியன் தோன்றினார் என்கிறது மார்க்கண்டேய புராணம். சிவபெருமானின் அட்டமூர்த்தங்களில் சூரியன் ஒன்று என்றும், சூரியன் சிவனின் வலக்கண்ணாய் இருப்பது எனவும், நான்கு முகமும் - எட்டுத் தோள்களும்- சிவந்த ஆடையும் உடையவர் சூரியபகவான் என்றும் சிவாகமங்கள் பேசும்.

"நங்கை யாளுமை
யாளுறை நாதனார்
அங்கையாளொடு டறுபதந்
தாழ்கடைக்
கங்கையாளவன்
கன்னி யெனப்படும்
கொங்கையாள்
உறையும குடமூக்கிலே
ஓதாநாவின்
திறத்தே யுரைக்கிரேல்
ஏதானும் மினிதாகும்
மியமுனை
சேதா ஏறுடையான்
அமர்ந்த விடம்
கேதாவிரியுரை யுங்
குடமூக்கிலே" —



என்ற நவகன்னிகள் நீராட்டை நாவுக்கரசர் பாடியுள்ளமை — நயக்கத்தக்கது. இளம்பெண்கள் நீராடிக்களித்ததலும், கன்னிப் பொங்கல் நாளில் (தையின் மூன்றாம் நாள்) ஆற்றுக்குப் படைத்து வழிபடும் நவகன்னியர் வழிபாடும் சோழமன்னர் காலத்தில் இருந்தது.

சூரியனை வழிபடும் பொங்கல் நாளைச் சிவ வழிபாட்டுடை நாளாக மதித்து தும்பை தாமரை, சங்குப்பூ, செம்பருத்தி ஆகிய மலர்களால் சிவனை அர்ச்சித்து வழிபட வாழ்வு வளம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களபதியின் மருந்துக்குறிப்புகள்

''பத்தியதற்கும்பொருந்துதெளி வளிக்கும். சுத்தநரம்பு நற் தூய்மையுறும் - பித்தொழியும் தாலவழி வாதபித்தம தத்தம் நிலை மன்னும் - அதிகாலை விழிப்பின் குணத்தைக் காண்.''
(பதார்த்தகுண சிந்தாமணி)

பிரம முகூர்த்தம் - என்ற பின்னிராப் பொழுதிலேயே நித்திரையை விட்டு, துயிலெழுந்து, இறைவழிபாடு செய்து கல்வியைத் தொடருவது நல்ல பழக்கமாகும், அதிகாலைப் பொழுதில் துயிலெழுந்தவர்க

காலையில் எழுந்தவுடன் ஆறு அவுன்ஸ் கொதித்தாறிய நீரைக் குடிக்க வேண்டும்: இரைப்பையில் தேங்கியுள்ளபித்தம் இதனால் தணிவடைந்து குடலின் அசைவியக்கங்கள் தூண்டப்படும். மலசலம் சீராகக் கழியும் நிலை, இவற்றால் உண்டாகும். பித்தம் தணியும் வாத — பித்த — சிலேற்பனம் என்ற மூன்று குறைபாடுகள் நீங்கி இம்மூன்றும் (வாத, பித்த, சிலேற்பனம்) சம நிலைப்படும் என்பதை பின்வ

*வைத்திய கலாநிதி:* செல்வி இ. மங்களாம்பிகை அம்மாள்.

ளுக்கு புத்தியிற் தெளிவு, ஞாபகத்திறன், உடலின் நரம்பு மண்டலம் வலுப்பெறல். ஆகியன உண்டாகும் என்று ஆயுர்வேத மருந்துப் பாடல் கூறியுள்ளது.

வைகறையாமம் துயில் எழுந்து, தான் செய்யும் நல்லறமும், ஒண்பொருளும் சிந்தித்து வாழ்வதில், தந்தையும் தாயையும் தொழு தெழுகை என்பது முந்தியோர் கண்டமுறை. இத்தகைய வாழ்வு எம் முன்னோருடைய வாழ்வாகும்.

ரும் பாடல் புலப்படுத்துகிறது. தூங்கிவிழித்தவுடன் சுத்தோதகம் அருந்திடில், ஓங்கி நின்ற பித்தம் ஒழிவதன்றி -தேங்கு மூத்திரம தங்கா, வாதாதியந் தம் தலமாத்திரை மூலவுந் தான். (ப. கு. சிந்தாமணி)

அதிகாலையில் மலம் கழித்தால் உடலுக்கு நலம் கிட்டும் வேலம் குச்சியாற் பற்துலக்கப் பல் இறுகும், வேம்புக்கு பற் துலக்கம் பெறும்.காலைக்குளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புப் பசியுண்டாகும் நோய்தீரும் இது ஆயுர்வேதம் சொல்வது.

காலையில் சிரமமின்றி மலங்கழிக்க முடியாதவர்கள் இரவு உணவின் பின்னர் வாழைப்பழம், திராட்சை, பால் இவைகளை உண்பது நன்று. திரிபலாதிச் சூரணத்தை சுடுநீரிலும் உண்ணலாம். இதனால் காலையில் மலங்கழியும்.

"மருக்காரை சுக்கு
மருதம்தோல் வெள்வேர்
எருக்காவரை பிரம்பு
ஏழும் நறுக்கிட்டு
நாலிலொன்றாய்க் காய்ச்சி
நாலுநாட் கொப்பளிக்க
பாலன்பல்லாம் கிழவன் பல்"

மருக்காரை — சுக்கு — மருதந்தோல்— வெள்வேர், எருக்கு, ஆவாரை— பிரம்பு ஆகியவற்றை கசாயமிட்டு வாய் கொப்பளிக்க முரசு கரைதல் நீங்கும்.

எனவே காலையில் எழுந்து காலைக் கடமைகளை வழுவின்றி நிறைவு செய்த பின்னர் அன்றாடம் கவனிக்க வேண்டிய வேலைகளை ஆரம்பிக்கலாம். அவ்வாறு ஆரம்பிக்கும் போது பலருக்கு மனம் இயங்கினாலும் உடல் இயங்க மறுக்கும். அப்போதுதான் வைத்தியரின் வீட்டின் முகவரி, அல்லது அலுவலகத்தின் முகவரி அவர்களுக்குத் தேவைப்படுகிறது. ○



வாழைச்சேனையிலிருந்து திருக்கோவில் வரையில்; திருஞான சம்பந்தர் பெருமான் சுந்தரமூர்த்தி நாயனார்; திருநாவுக்கரசு சுவாமிகள், மணிவாசகப் பெருமான் ஆகியோர் பெயர்களில் — குரு குலங்கள் தோன்றியுள்ளன. பக்திப் பிரவாக அலை பரவுவதன் அறிகுறியாக இதைக் குறிப்பிட்டார். பாடசாலைகளிலும் சமய அறிவுப்பணிகள் தொடங்குகின்றனவென்றும், அவற்றில் தாமும் கலந்துகொள்ளக் கூடியதாயுள்ளது என்பதையும் குறிப்பிட்டார்.

*யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் 9-9-1974 அன்று அருள்மிகு அருணாசலம் செல்லத்துரை சுவாமிகளைச் சந்தித்து மட்டக்களப்பிலிருந்து வந்த சுவாமிகளிடம் மட்டக்களப்பு நிலவரம் பற்றிக் கேட்ட போது அவர் சொன்னவை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழை,
# சனாதன
# தர்மத்தை,
# மக்களை,
# நம்பி
# வேதமுரசு
# எழுந்தது.

வேதமுரசு நூல் வெளியீடு

1 - 9 - 1994 வியாழக்கிழமை முற்பகல் 11 மணி

நல்லூர் முருகப்பெருமான் கோவில் மணி ஒலிக்கின்ற போதில்; சனாதனதர்மத்தைப் பேணுவோர், நிறைந்திருந்த யாழ்ப்பாண நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில், இருந்து வேதமுரசு வெளிவந்தது.

வேதமுரசு நூல்களை - அருள்மிகு - ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், சிவத்தமிழ் செல்வி - தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரும் கையேற்று வெளியிட்டு வைத்தனர்.

அவையின் நல்வாழ்த்துக்களோடு வேதமுரசு உலாவந்தது.

இந்நிகழ்வு பற்றி உதயன் நாளிதழ் 24 - 9 - 1994 அன்று வெளியிட்ட செய்தியை மீளவும் இங்கு படைக்கின்றோம்.

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகளும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரும், வெளியீட்டு நிகழ்வில்.* ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்பு மனிதராவதற்கு சமய நெறியை பின்பற்ற வேண்டும்.**

"வேதமுரசு" வெளியீட்டு விழாவில் உரை

சிறந்த மனிதர்களாக வாழ இளந்தலைமுறையினர் சமய நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

"வேதமுரசு" சமயச் சஞ்சிகை வெளியீட்டு விழாவில் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு கூறினார். செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி பேசும் போது மேலும் கூறியதாவது:

கீதையின் தத்துவங்கள் அற நெறிகள் குறித்த யோகிகளின் கருத்துக்களையும், சைவத்தின் மாண்புகளையும் மக்களிடையே எடுத்துக்கூறும் வகையில் வேத முரசு சிறப்பு அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. இளைஞர் கள் மத்தியில் ஒரு தெளிவு ஏற்படுத்தக் கூடிய கருவூலங் களைக் கொண்டுள்ள இந்தச் சஞ்சிகையின் பணி தொடர வேண்டும். இதன்மூலம் எமது மக்கள் சைவமதத்தின் தத்து வங்களைப் பரிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் இவ்வாறு அவர் கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பேசும்போது கூறியதாவது:

வடக்கையும் – கிழக்கையும் இணைக்கும் பாலமாக வெளி வந்துள்ள வேதமுரசு சஞ்சிகை எமது மதம் பற்றிய அறிவைப் புகட்டும் சஞ்சிகையாக அமைந்து சைவத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் ஒரு சஞ்சிகையாக வெளிவந்துள்ளது என்றார்.

திரு. வே. கே. தனபாலன் அவர்கள் அவையில் தலைமை தாங்கினார். மதிப்பீட்டு உரையை திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் நிகழ்த்தினார் நன்றியுரையை திரு. நா. போஜன் ஆற்றினார்கள். வெளியீட்டுரை திரு. எம். இ. யோகேந்திரம் அவர்களால் அவையில் வைக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான அன்பர்கள் நிகழ்வில்கலந்து கொண்டனர். (குறிப்பு: வேதமுரசு வெளியீட்டில் பங்குகொண்டு மேலான ஆதரவைத் தந்த அனைவருக் கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.)

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுவ
சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெருகல் மண்ணில் வேலவன் ஆலயம்

□ யோ. ஆனந்தசங்கரி □

இற்றைக்கு ஐநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இக் கோயில் பற்றிய வரவாறு. வழி வழிக்கதை வடிவமாகவே உள்ளது: இக் கோயில் நிருவாகத்தை திருவகித்து வருவோரைக் குளக்கோட்டன் குடியமர்த்தியதாகவும், அம்மன்னனின் ஆணைப்படியே சிந்துநாட் டினர் இக் கோயிலை நிருவகித்து வருகின்றனர் எனவும், (கோயிற் கங்காணங்கள்) கோயில் நிருவாகிகள் தம்பி வருகின்றனர்,

கோயிலின் அமைவிடம் இயற்கையாகவே வளம்பெற்றது. நீர் வளம், நிலவளம்மிக்க இச் சூழலில் 6 ஆம் நூற்றாண்டுக் குப் பின்னர் தமிழ் மக்களின் குடியமர்வு நெருக்கமாக ஏற்பட வில்லை.

ஏறக்குறைய 1686 களில் திருக்கோணமலையைச் சேர்ந்த தம்பலகமத்தை வதிவிடமாகக் கொண்ட வீரக்கோன் முதலியார் இயற்றிய வெருகல் சித்திரவேலாயுதர் காதல் என்ற நூல், இக் கோயிலின் அக் காலத்துச் சிறப்புக்களையும் வரலாற்றையும் கூறுகின்றது.

“மெத்த புகழ் வாய்ந்த வெருகற்பதி உறையுஞ்
சித்திர வேலாயுதரின் சீரடியிலன்பு கொண்டு
மானமுடன் மிக்க வயல்நிலமும், தோப்புகளும்
மானியமா யீந்த மகராச ராசேந்திரன்”

“மாணிக்கம் வைத்திழைத்த வண்ணப், பதக்கமுடன்
பூணணிக ளீந்து புகழ்படைத்த பூபாலன்”

“திட்டமுடன் முன்னாளில் செய்த நல்லநாதனெனுஞ்
செட்டி வம்சத்திலுள்ள செய்ய பிரதானிகள் போய்
பன்னரிய பாதம் பணிந்து தொழு தேத்துகையில்”

என்ற பாடல் வரிகளின் மூலம். 16 ம் நூற்றாண்டுக் காலத்தில் இக் கோயில் சிறப்புற்றிருந்ததென்றும், இராசேந்திரன் மானியம்

கொடுத்ததும், பூபால வன்னிமை கோயிலில் கவனம் செலுத்தியதும், செட்டிகுலத்தார் ஆகியோர் இக் கோயிலின்பால் தம் கவனத்தைப் பதித்தமையையும், இக் கவியடிகள் மூலம் உணர முடிகின்றது.

குறிப்பாக 16 ம் நூற்றாண்டின் பின்னர் வெளிநாட்டு ஆட்சியின்போது சீர்குலைந்த இக் கோயிலின் நிருவாகத்தை மீண்டும் நன்நிலைக்குக் கொண்டுவரும் முயற்சிகள் (1950 ம் ஆண்டிற்குப் பின்னர்) எடுக்கப்பட்டு வந்தன. ஆனால் அம் முயற்சியின் பேறுகள் நீண்ட நாட்களுக்கு நிலை பெறாது இற்றுப் போயிற்று.

மல்லிகைத்தீவு. பள்ளிக்குடியிருப்பு, ஈச்சிலம்பற்றை (திருக்கோணமலை மாவட்டம்) ஆகிய ஊர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் நிருவாக சபையில் முக்கிய இடத்தைப் பெறுவார்கள். சிந்து நாட்டாருக்கு கோயில் உருத்துடையது என்பதைக் குறிக்கவே இவ் வழமை கையாளப்படுகின்றது. ஏனையரும் (குரு நாடு. பெருநாடு) இந் நிருவாகத்தில் நிரப்பப்படுவர். ஆக திருவிழாக்களைச் செய்வதற்கு முன்பு அல்லது, திருவிழாக் காலத்தின் பின்பு தெரியப்படும் இத் தெரிவுச் சபை - விழாக்களைப்பற்றிய முடிவுகளைப் பகிர்ந்து, இக் கோயிற் திருவிழாவையும் ஏனைய பூசை வழிபாடு, ஆலய வளர்ச்சிக்கான நடவடிக்கைகளையும் செய்யும். இவ்வாறு காலத்திற்கு காலம் இக் கோயில் திருவாகம் நடைபெறும் திருவிழாக்கள் பொலியும்.

இது ஒரு புறம் நடைபெறுகையில், 1976-ம் ஆண்டிற்குப் பின்னர் இக்கோயிலின் அமைவிடத்திலிருந்து — ஆறுமைல்களுக்குட்பட்ட பகுதிக்குள் — (மிகிந்தபுர — சோமபுர) சிங்களக்குடியமர்வுகள் பெருகியுள்ளன. எதிர்காலத்தில் இவ்வாலயத்திற்கு ஏற்படக்கூடிய ஆபத்தான அச்சுறுத்தலுக்கான குறியாக இதைக் கொள்ளலாம். இன்றைய சூழ் நிலையில் சிறிலங்கா படையினரின் தங்ககம் இங்கு அமைந்திருப்பதால். அச்சமின்றி வழிபடும் மனப்பாங்கை மக்கள் இழந்து விட்டனர். எதிர்காலத்தில் இவ்விடத்தில் தமிழ் குடிகள் பரவி வாழ்வதும், சைவக் குழந்தைகளுக்கான குருகுலம் ஒன்றை உருவாக்கி, அதைச் சிறந்தோங்கி நடத்த வழி செய்வதும், ஆலய நிருவாகம் நன்னெறியிற் பரந்துபட்டு நடந்து ஓங்கவும் வகை செய்வது இம்மாநிலத்தே வாழும் சைவத் தமிழர் கடமையாகும். சூர்மார்பும் குன்றும் துளைத்த வேலவன் திருவருள், இந்நினைவை நிறைவு செய்யுமென்று நம்புவோம். □ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பதாரரின் முழுப்பெயர்: ..........................................

விண்ணப்பதாரரின் முகவரி: ..........................................

விண்ணப்பதாரரை உறுதிப்படுத்துபவரின் பெயரும் முகவரியும்,

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

இங்கே வெட்டிக் கொள்ளவும்.

**போட்டியிற் பங்கு கொள்வதற்கான தகைமைகள்,**

- □ வீட்டிற் கோலமிடல், வழிபாடு, மக்கள் நல உணர்வு,
- □ ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டில் ஆர்வம்,
- □ பண்ணோடு தேவார பாசுரங்களைப் பாடுவதிற் திறன்,
- □ இந்துசமயக் கட்டுரை, கவிதை, ஆக்கங்கள் எழுதும் திறன்.
- □ சைவசமய பாடத்திட்டத்திற்கமைவாக, மாதாந்த தவணைப் பரீட்சை மூன்றிலும் இப்பாடத்திலும், தமிழ் மொழியிலும் 50 புள்ளிகள் (அதற்கு மேல்) பெறுதல்; (முதல் ஆண்டு மாணவர் முதல் பத்தாம் ஆண்டு வரை.)
- □ உள்ளூர் சைவசமய நிறுவனங்கள், அமைப்புக்கள், சபைகள் நடத்திய போட்டிகளில், கலந்து பரிசு பெற்றமைக்கான தகமைச் சான்றுகள்.
- □ யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின், தொண்டர் அணியிற் சேவையாற்றியதற்கான சான்றுகள்;
- □ சுவாமி விவேகானந்தர் தொடர்பான மன்றங்களில் அங்கத்துவம் பெற்றிருத்தல் □ மூன்றுக்கு மேற்பட்ட தகுதிகளில், பெறுபேறு பெற்ற விண்ணப்பதாரர்கள் சிறப்பு பரிசு பெறுவர்.

பாடசாலை தொடர்பான பெறு பேறுகளுக்கு வகுப்பாசிரியர் அல்லது அதிபர் ஏனையவர்கள், பெற்றோர் அன்றி பாதுகாவலர் ஒப்பத்துடன், தொடர்பு கொண்டால் போதுமானது;


விண்ணப்பங்களை —25 - 2 - 1995— வரை விண்ணப்பிக்கலாம்.

1 - 3 - 1995 முதல் — 30 - 3 - 1995 வரையுள்ள காலத்தில் பரிசு வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமுரசு — இல 40 — பழம்றோட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

உதயஞாயிறின் வரவு கண்டு
உலகத்து நாயகியின் மனது பூக்குது.
மஞ்சளும், இஞ்சியும், வாழையும் கரும்பும்
மாணிக்க நெற்கதிர்களும் பூத்துக்குலுங்கி
வேதமுரசு வாசகர்களுக்கு வாழ்த்துக் கூறுது.



வேதமுரசு இதழ் இரண்டு - 1994 மார்கழி 1995 தை-மாசித் திங்கள்

சைவ சமயத்தின் நல்நோக்கங்களை இளைய தலைமுறையினர் அறிய வாய்ப்பாக "வேதமுரசு" வெளிக்கொணரப்பட்டிருப்பது நன் முயற்சி. காலத்தின் தேவையை உணர்ந்த சைவ அன்பர்களின் முயற்சியைப் பாராட்டுகிறோம் ( ஐ. எஸ். ஏ. )
ஐக்கியதீபம் இதழ், கார்த்திகை—1994 நூலரங்கம் பகுதி.

மண்கும்பான் விநாயகர் கோவில் சிறப்பு ஆக்கம், வேதமுரசு மூன்றாம் இதழில் வரும்.

சைவப்பிரகாச அச்சகம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org